# வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (குடிசார் மற்றும் மின்னியல்) தரம் III மற்றும் பயிற்சித் தரம் ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018

வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (குடிசார் மற்றும் மின்னியல்) ஆகிய பதவிகளுக்கு **அட்டவணை – I** இல் காட்டப்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் **2018 டிசெம்பர் மாதமளவில்** யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **26.11.2018** ஆகும்.

- **அட்டவணை – I**

| இல | பரீட்சைப் பெயர் | பரீட்சை இல | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் குடிசார் (Civil) **தரம் III** பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2018 | **I** | **36** |
| 02 | வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் குடிசார் (Civil) **பயிற்சித் தரம்** பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2018 | **II** | |
| 03 | வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மின்னியல் (Electrical) **தரம் III** பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2018 | **III** | **02** |
| 04 | வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மின்னியல் (Electrical) **பயிற்சித்தரம் தரம்** பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2018 | **IV** | |

## 02. ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள் :-

02.1 **01.06.2013**ம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட **அட்டவணை – I** இல் காட்டப்பட்டுள்ள மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் பதவிகளுக்குரிய சேவைப்பிரமாணக் குறிப்பு மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும், வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் G/NPC/A6/DCS(Adm)/Appr/TO/2018 இலக்க 2018.09.07ம் திகதிய கடிதம், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் **1817/30** ஆம் இலக்க **2013.07.03**ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கும் மற்றும் ஆட்சேர்ப்புக் காலத்தில் இவற்றில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் திருத்தங்களிற்கும் உட்பட்டு தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் **அட்டவணை – I** இல் காட்டப்பட்டுள்ள பதவிகளின் தரம் III மற்றும் பயிற்சித் தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

02.2 திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் நியமனத்திற்கு தேர்வு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து மூன்று (03) வருடங்களிற்கு தகுதிகாண்கால அடிப்படையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் III (குடிசார் மற்றும் மின்னியல்) பதவிக்கு நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு மேற்குறித்த **அட்டவணை – I** இல் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

02.3 திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் பயிற்சித் தரத்திற்குரிய நியமனத்திற்கு தேர்வு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (குடிசார் மற்றும் மின்னியல்) பதவிகளின் பயிற்சித் தரத்திற்கு நியமிக்கப்படுவர். இப்பயிலுனர்களிற்கென குறித்தொதுக்கப்பட்ட பயிற்சிக்காலத்தின் முடிவின் பின்னர் தகைமைகாண் பரீட்சை ஒன்றுக்குத் தோற்றுதல் வேண்டும். இப்பரீட்சையில் சித்திபெற்றால் மட்டுமே இவர்களுக்கு தரம் III இற்கான நியமனம் வழங்கப்படும்.

02.4 இச்சேவைகள் இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந்நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கட்டுப்படல் வேண்டும்.

02.5 ஒரு சேவை நிலையத்தில் நியமனம் பெறுபவர், அதே சேவை நிலையத்தில் குறைந்தது **ஐந்து (05)** வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றுதல் வேண்டும் என்பது கட்டாய நிபந்தனையாகும்.

02.6 பொது நிர்வாக சுற்றறிக்கை 01/2014 மற்றும் இது தொடர்பாகவும் அதனைத் தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமையவும் நியமனத் திகதியிலிருந்து **ஐந்து (05)** வருடங்கள் முடிவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

02.7 நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். நியமிக்கப்படவுள்ள ஆட்களின் எண்ணிக்கை **அட்டவணை – I**இல் காட்டப்பட்டவாறாகும். எனினும்அறிவிக்கப்பட்ட வெற்றிடங்கள் தொடர்பில் சில வெற்றிடங்கள்

அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

## 03. சம்பள அளவுத்திட்டம் :-

### 03.1 மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் குடிசார், மின்னியல் தரம் III பதவிக்கானது :-

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016க்கு அமைவான, சம்பளத் தொகுதி **MN 3 - 2016** க்கு ஏற்ப **அட்டவணை - I** இல் குறிப்பிடப்பட்ட பதவிகளின் தரம் - III ற்கான திரட்டிய சம்பள விகிதமானது **ரூபா 31,040 – 10 x 445 - 11 x 660 - 10 x 730 – 10 x 750 – 57,550/-** ஆகும். (ரூபா 32,375/- என்ற சம்பள படிநிலைக்கு முன் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் **அட்டவணை – II** இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

### 03.2 மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் குடிசார், மின்னியல் பயிற்சித் தரம் பதவிக்கானது :-

பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2016க்கு அமைவாக, அச் சுற்றறிக்கையின் **அட்டவணை - V** இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு ஏற்ப மாதாந்தப் படி மற்றும் சீராக்கற்படி என்பன வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1ம் ஆண்டு - | ரூபா 21,532.00 | மற்றும் சீராக்கற் படியும் |
| 2ம் ஆண்டு - | ரூபா 21,770.00 | |

## 04. பொதுவான தகைமைகள் :-

04.1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

04.2 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றக் கூடிய சிறந்த தேகாரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த நன்னடத்தை உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

04.3 அ) விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். இவ் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் உள்ள **ஆறு (06)** ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது **மூன்று (03)** ஆண்டுகளாயினும் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

ஆ) விண்ணப்பதாரர் அல்லது பெற்றோர் வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருப்பதுடன் ஆகக்குறைந்தது **ஐந்து (05)** வருடங்கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும். **(நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்த பிரதேச செயலாளரினால் சான்றுப்படுத்தி கிராம சேவையாளரினால் வழங்கப்படும் சான்றிதழ் அல்லது தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்)**

04.4 விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இப்பதவிக்காக கோரப்பட்ட **சகல தகைமைகளையும்** விண்ணப்பதாரி கொண்டிருத்தல் வேண்டும்.

04.5 விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரி **18 வயதிற்கு குறையாதவராகவும், 35 வயதிற்கு மேற்படாதவராகவும்** இருத்தல் வேண்டும்.

## 05. கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகள் :-

ஒவ்வொரு பதவிக்குமான கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகள் என்பன இவ்விளம்பரத்தின் **அட்டவணை – II** இல் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பிக்கும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தனது தகைமைகளுக்கு மிகவும் பொருத்தமான பதவிகளுக்கு மட்டுமே விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். இவ்விண்ணப்ப முடிவுத்திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கோரப்பட்டுள்ள சகல தகைமைகளையும் விண்ணப்பதாரி கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களனைத்தும் முன்னறிவித்தல் எவையுமின்றி நிராகரிக்கப்படும்.

## 06 ஆட்சேர்ப்பு முறை :-

06.1 எழுத்துப் பரீட்சை மூலம் திறமை அடிப்படையிலும், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள பொது நிர்வாக சுற்றறிக்கைகள், ஆட்சேர்ப்புத் திட்டம், தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாகவும் **அட்டவணை – I** இல் காட்டப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் நேர்முகப் பரீட்சையின்போது பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். நேர்முகப்பரீட்சையின் போது சகல தகைமைகளும், ஆவணங்களும் பரிசீலிக்கப்படும். இதன் போது புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

06.2 மேற்படி தகைமையடைந்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து, எழுத்துப்பரீட்சையில் தகைமைபெறும் பரீட்சார்த்திகள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் வரிசை ஒழுங்கில் நிலவும் வெற்றிடத்திற்கமைவாக நியமனத்திற்கான நேர்முகத் தேர்விற்கு தெரிவு செய்யப்படுவர்.

06.3 தொழிநுட்ப உத்தியோகத்தர் (குடிசார் மற்றும் மின்னியல்) ஆகிய பதவிகளின் **தரம் III** இற்கே நேரடியான ஆட்சேர்ப்புச் செய்யப்படும். ஆட்சேர்ப்புத்தரமான தொழில்நுட்ப உத்தியோகத்தர் **தரம் III** இற்கு ஆட்சேரப்புச் செய்வதற்குத் தகுதி பெற்ற விண்ணப்பதாரிகள் போதுமானதாக இல்லாத பட்சத்தில் **மீதியான வெற்றிடங்கள் பயிற்சித் தரத்திற்கு** ஆட்சேர்ப்புச் செய்பவர்களூடாக நிரப்பப்படும்.

06.4 தொழில்நுட்ப உத்தியோகத்தர் (குடிசார் மற்றும் மின்னியல்) பதவிகளுக்கான ஆட்சேர்ப்பானது, இப்பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தின் **பந்தி 7.2.3.V** இற்கு அமைவாக மாவட்ட பிரதிநிதித்துவ அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

06.5 வெற்றிடத்தின் 03% விசேட தேவையுடையோருக்காக (மாற்றுத்திறனாளிகளுக்காக) ஒதுக்கப்படும். பரீட்சார்த்தி நியமனத்திற்காக தெரிவுசெய்யப்படும் போது குறித்த பதவியில் கடமையாற்றுவதற்கு தனது விசேட தேவையுடைய தன்மையானது (Disability) தடையாக அமையாது என்பதனை விசேட மருத்துவப் பரிசோதனை அறிக்கை மூலம் நிரூபித்தல் வேண்டும். எனினும் விசேட தேவையுடைய பரீட்சார்த்தி ஒருவர் நியமனத்திற்காக தகைமை பெறுவது எழுத்துப் பரீட்சையில் வேண்டப்பட்ட புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதன் அடிப்படையிலாகும்.

## 07. பரீட்சைக் கட்டணம் :-

விண்ணப்பதாரி வதியும் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் ரூபா **500.00**ஐ **“செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்”** அவர்களின் **“3401”** என்ற வைப்புக் கணக்கிற்குச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படவும்மாட்டாது.

## 08. விண்ணப்பிக்கும் முறை :-

08.1 இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக A4 அளவிலான (21செ.மீ x 29செ.மீ) தாளின் 1 முதல் 10 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும், 11 முதல் 14 வரையான பந்திகள் இரண்டாம் பக்கத்திலும், மிகுதி மறுபக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை **26.11.2018** ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, **“செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகம், வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்”** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

08.2 ஒன்றிற்கு மேற்பட்ட போட்டிப் பரீட்சைகளுக்கு விண்ணப்பிப்பதற்கு தகைமையுள்ளவர்கள், ஒரேயொரு விண்ணப்பப் படித்தினை மட்டும் பூரணப்படுத்தி அனுப்பி வைத்தல் வேண்டும் என்பதுடன், இப் பரீட்சைக் கட்டணத்தை ஒரே தடவை மட்டும் செலுத்துதல் போதுமானதாகும்.

08.3 விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **“வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (குடிசார் மற்றும் மின்னியல்) ஆகிய பதவிகளின் தரம் III மற்றும் பயிற்சித்தரம் போன்ற தரங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2018”** எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்களும், உரிய தகவல்களைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

08.4 விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப் பிரதி மற்றும் முற்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பிவைக்கப்படும். **பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக்கருதப்படலாகாது.**

08.5 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள தகைமையுள்ள விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டதும் பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைத் திகதிக்கு குறைந்தபட்சம் **மூன்று (03)** நாட்களுக்கு முன்னரேனும் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி பின்வரும் விபரங்களுடன் **“செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு**

**அலுவலகம், வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல - **021 221 9939**, தொலைநகல் இல - **021 221 9940**)

**குறிப்பு :-**
கோரிக்கைக் கடிதம், விண்ணப்பப் படிவம் மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் சான்றுப்படுத்திய பிரதி, அனுமதி அட்டை அனுப்பி வைப்பதற்கான தொலைநகல் இலக்கம்.

08.6 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளினது விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது. மேலும் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் கோரப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படலாம் என்பதுடன் இவை தொடர்பான அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது.

## 09. ஆள் அடையாளத்தை நிரூபித்தல் :-

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்தி உரிமை **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** அவர்களின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

## 10. பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-

விண்ணப்பப்பத்திரங்களைப் பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்பத்திலாவது தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின், அவரது பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 11. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :-

**ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும்.** ஒரு அரச நிறுவனத்திலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தமது நிறுவனத் தலைவர் அல்லது அவர்சார்பில் கையொப்பமிட அதிகாரம் பெற்றவர் மூலமாக உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகள் அப்பகுதியின் கிராம சேவையாளர், சமாதான நீதவான், சத்தியபிரமாண அதிகாரி, சட்டத்தரணி, நொத்தாரிசு, கடற்படை, தரைப்படை, ஆகாயப்படை ஆகியவற்றிலுள்ள ஆணைபெற்ற உத்தியோகத்தர், ரூபா 395,520.00 க்குக் குறையாத தொகையை வருடாந்த திரட்டுச் சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க அல்லது உள்ளூராட்சி அல்லது மாகாண உத்தியோகத்தர், மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

## 12. பரீட்சைத் திட்டம் :-

### 12.1 வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் குடிசார் (Civil) தரம் III மற்றும் பயிற்சித் தரம் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்

இவ் எழுத்துப் பரீட்சையானது கீழ்க் குறிப்பிட்டவாறான இரண்டு (02) வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் என்பதுடன். இப்பரீட்சை தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்பதுடன் இவ் எழுத்துப் பரீட்சையில் தோற்றி சித்திபெறத் தவறிய எந்தவொரு பரீட்சார்த்திக்கும் மீள்திருத்தத்திற்கு விண்ணப்பிப்பதற்கான ஏற்பாடுகள் எதுவுமில்லை.

| இல | வினாத்தாள் | வினாத்தாள் உள்ளடக்கம் | காலம் | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01. | உளச்சார்புப் பரீட்சை | இவ்வினாத்தாளானது விமர்சன ரீதியான காரணங்களை பரீட்சார்த்திகள் அணுகும் திறன், முடிவெடுக்கும் திறன் மற்றும் பகுப்பாய்வு செய்யும்திறன் ஆகியவற்றினை மதிப்பீடு செய்யும் பொருட்டு தயாரிக்கப்படும். | 01 மணித்தியாலம் | 100 |

| | | | | |
|---|---|---|---|---|
| 02. | தொழிநுட்பவியலுடன் தொடர்புடைய பரீட்சை | இவ்வினாத்தாளானது விண்ணப்பதாரியின் கட்டட நிர்மாணம் பற்றிய அடிப்படை அறிவு, கட்டடத்திற்கான மூலப்பொருட்கள், கட்டுமான வேலைக்குரிய வரைவு (Plan) தயாரித்தல் மற்றும் வரைவை (Plan) விளங்கிக்கொள்ளுதல், அளவீடுகள், அடித்தளம், மண்ணின் வகை, வீதி நிர்மாணம் மற்றும் பராமரிப்பு, மதிப்பீடு தயாரித்தல், நீர் விநியோகம், வடிகால் அமைப்பு மற்றும் கழிவகற்றல் ஆகியவற்றின் அறிவினை மதிப்பீடு செய்யும் பொருட்டு தயாரிக்கப்படும் வினாத்தாளாகும். | 03 மணித்தியாலங்கள் | 100 |

**12.2 வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மின்னியல் (Electrical) தரம் III மற்றும் பயிற்சித் தரம் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்**

இப் பரீட்சைகள் கீழ்வருமாறு இரண்டு (02) வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். இது தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்பதுடன் இவ் எழுத்துப் பரீட்சையில் தோற்றி சித்திபெறத் தவறிய எந்தவொரு பரீட்சார்த்திக்கும் மீள்திருத்தத்திற்கு விண்ணப்பிப்பதற்கான ஏற்பாடுகள் எதுவுமில்லை.

| இல | வினாத்தாள் | வினாத்தாள் உள்ளடக்கம் | காலம் | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01. | உளச்சார்புப் பரீட்சை | இவ்வினாத்தாளானது விமர்சன ரீதியான காரணங்களை பரீட்சார்த்திகள் அணுகும் திறன், முடிவெடுக்கும் திறன் மற்றும் பகுப்பாய்வு செய்யும்திறன் ஆகியவற்றினை மதிப்பீடு செய்யும் பொருட்டு தயாரிக்கப்படும். | 01 மணித்தியாலம் | 100 |
| 02. | தொழிநுட்பவியலுடன் தொடர்புடைய பரீட்சை | இவ்வினாத்தாளில் மின்சுற்று பற்றியதும் (Electric Circuits), மின்னியல் சம்பந்தமான ஒழுங்குகள் (Electrical Regulations), வரைவு சம்மந்தமான அறிவு (Knoweldge on Plans), மதிப்பீடு தயாரித்தல் மற்றும் சுற்றுக்களை பரிசீலனை செய்தல் (Preparation of estimates and testing of circuits) ஆகிய விடயங்களை உள்ளடக்கியிருக்கும். | 03 மணித்தியாலங்கள் | 100 |

**குறிப்பு** :-

இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருப்பதால் நேர்முகத் தேர்விற்கு தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் நாற்பது வீதத்தை (40%) பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரிகள் இப் போட்டிப் பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகளின் வரிசை ஒழுங்கு (Merit Order) கருத்தில் கொள்ளப்படும்.

**13.** பரீட்சார்த்திகளுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களால் www.np.gov.lk என்ற வடக்கு மாகாண இணையத்தளம் மூலம் வெளியிடப்படும். பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் தபால் மூலமாக அனுப்பிவைக்கப்படும்.

**14.** இப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்துச் செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு. இவ் விளம்பரத்தில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் தமிழ் மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

**15.** இப் பரீட்சை தொடர்பான அறிவித்தலினை www.np.gov.lk என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

**அ.சிவபாலசுந்தரன்.**
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
25.10.2018

## கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகள்

| தொ இல | பதவிப் பெயர் | கல்வித் தகைமைகள் | தொழில்சார் தகைமைகள் |
|---|---|---|---|
| 01 | தொழிநுட்ப உத்தியோகத்தர் (குடிசார்) தரம் III | க.பொ.த (சா/த)ப் பரீட்சையில் **ஒரே அமர்வில்** மொழி (தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்), கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக **நான்கு (04)** பாடங்களில் திறமைச் சித்திகளுடன் **ஆறு (06)** பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.<br>**அத்துடன்**<br>க.பொ.த (உ/த)ப் பரீட்சையில் கணிதப்பாடத்துறையில் தூய கணிதம் / பிரயோக கணிதம் / இணைந்த கணிதம் அத்துடன் பௌதீகவியல் ஆகிய பாடங்கள் உட்பட **மூன்று (03)** பிரதான பாடங்களில் **ஒரே அமர்வில்** சித்திபெற்றிருத்தல் வேண்டும் | (1) மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி தொழில்நுட்பவியல் நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (சிவில்) சான்றிதழ்.<br>**அல்லது**<br>(2) தேசிய பயிலுநர் மற்றும் தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா (சிவில்) சான்றிதழ்.<br>**அல்லது**<br>(3) கல்வி உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (சிவில்) சான்றிதழ்.<br>**அல்லது**<br>(4) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்பவியல் டிப்ளோமா (சிவில்) சான்றிதழ்.<br>**அல்லது**<br>(5) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் (IESL) நடாத்தப்படும் குடிசார் (சிவில்) பொறியியல் பரீட்சையில் முதலாம் பகுதியை திருப்திகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>(6) தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) துறை தொடர்பான தேசிய தொழிற் தகைமை (NVQ) மட்டம் - VI இனை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>(7) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட தொழில்நுட்பவியல் சான்றிதழ்களை வெளியிடுகின்ற நிறுவனங்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் மேற்படி தொழில்நுட்பவியல் தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானவையென மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற வேறு தொழில்நுட்பவியல் தகைமைகள். |
| 02 | தொழிநுட்ப உத்தியோகத்தர் (குடிசார்) பயிற்சித் தரம் **(பயிற்சிக் காலம் 01 வருடம்)** | க.பொ.த (சா/த) பரீட்சையில் **ஒரே அமர்வில்** மொழி(தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்), கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக **நான்கு (04)** பாடங்களில் திறமைச் சித்திகளுடன் **ஆறு (06)** பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அத்துடன்**<br>க.பொ.த (உ/த) பரீட்சையில் கணிதப்பாடத்துறையில் தூய கணிதம் / பிரயோக கணிதம் / இணைந்த கணிதம் அத்துடன் பௌதீகவியல் ஆகிய பாடங்கள் உட்பட **மூன்று (03)** பிரதான பாடங்களில் **ஒரே அமர்வில்** சித்திபெற்றிருத்தல் வேண்டும். | 1. மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியின் தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் (NCT) (சிவில்) பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>2. மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் தொழில்த்துறை தொழிநுட்பவியலாளர் துறையில் உள்ள விண்ணப்பிக்கும் பதவிக்கு பொருத்தமான தேசிய சான்றிதழ் பாடநெறியினை(NCC) (சிவில்) திருப்திகரமாக பின்பற்றி உரிய சான்றிதழினை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>3. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட தொழில்நுட்பவியல் சான்றிதழ்களை வெளியிடுகின்ற நிறுவனங்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் மேற்படி தொழிநுட்பவியல் தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானவையென மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற் வேறு தொழில்நுட்பவியல் தகைமைகள். |

| | | | |
|---|---|---|---|
| 03 | தொழிநுட்ப உத்தியோகத்தர் (குடிசார்) பயிற்சித் தரம் **(பயிற்சிக் காலம் 02 வருடங்கள்)** | க.பொ.த (சா/த) பரீட்சையில் **ஒரே அமர்வில்** மொழி(தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்), கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக **நான்கு (04)** பாடங்களில் திறமைச் சித்திகளுடன் **ஆறு (06)** பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அத்துடன்**<br>க.பொ.த (உ/த) பரீட்சையில் கணிதப்பாடத்துறையில் தூய கணிதம் / பிரயோக கணிதம் / இணைந்த கணிதம் அத்துடன் பௌதீகவியல் ஆகிய பாடங்கள் உட்பட **மூன்று (03)** பிரதான பாடங்களில் **ஒரே அமர்வில்** சித்திபெற்றிருத்தல் வேண்டும். | பொருத்தமற்றது |
| 04 | தொழிநுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்) தரம் III | க.பொ.த (சா/த)ப் பரீட்சையில் **ஒரே அமர்வில்** மொழி (தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்), கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக **நான்கு (04)** பாடங்களில் திறமைச் சித்திகளுடன் **ஆறு (06)** பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அத்துடன்**<br>க.பொ.த (உ/த)ப் பரீட்சையில் கணிதப்பாடத்துறையில் தூய கணிதம் / பிரயோக கணிதம் / இணைந்த கணிதம் அத்துடன் பௌதீகவியல் ஆகிய பாடங்கள் உட்பட **மூன்று (03)** பிரதான பாடங்களில் **ஒரே அமர்வில்** சித்திபெற்றிருத்தல் வேண்டும் | (1) மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி தொழில்நுட்பவியல் நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (மின்னியல்) சான்றிதழ்.<br>**அல்லது**<br>(2) தேசிய பயிலுநர் மற்றும் தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா (மின்னியல்) சான்றிதழ்.<br>**அல்லது**<br>(3) கல்வி உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (மின்னியல்) சான்றிதழ்.<br>**அல்லது**<br>(4) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்பவியல் டிப்ளோமா (மின்னியல்) சான்றிதழ்.<br>**அல்லது**<br>(5) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் (IESL) நடாத்தப்படும் மின் பொறியியல் பரீட்சையில் முதலாம் பகுதியை திருப்திகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>(6) தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்) துறை தொடர்பான தேசிய தொழிற் தகைமை (NVQ) மட்டம் - VI இனை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>(7) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட தொழில்நுட்பவியல் சான்றிதழ்களை வெளியிடுகின்ற நிறுவனங்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் மேற்படி தொழிநுட்பவியல் தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானவையென மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற வேறு இத்துறைசார் தொழில்நுட்பவியல் தகைமைகள். |
| 05 | தொழிநுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்) பயிற்சித் தரம் **(பயிற்சிக் காலம் 01 வருடம்)** | க.பொ.த (சா/த) பரீட்சையில் **ஒரே அமர்வில்** மொழி(தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்), கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக **நான்கு (04)** பாடங்களில் திறமைச் சித்திகளுடன் **ஆறு (06)** பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அத்துடன்**<br>க.பொ.த (உ/த) பரீட்சையில் கணிதப்பாடத்துறையில் தூய கணிதம் / பிரயோக கணிதம் / இணைந்த கணிதம் அத்துடன் பௌதீகவியல் ஆகிய பாடங்கள் உட்பட **மூன்று (03)** பிரதான பாடங்களில் **ஒரே அமர்வில்** | 1. மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பவியல் கல்லூரியின் தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழினை (NCT) (மின்னியல்) பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>2. மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் தொழில்த்துறை தொழில்நுட்பவியலாளர் துறையில் உள்ள விண்ணப்பிக்கும் பதவிக்கு பொருத்தமான தேசிய சான்றிதழ் பாடநெறியினை (NCC) (மின்னியல்) திருப்திகரமாக பின்பற்றி உரிய |

| | | | |
|---|---|---|---|
| | | சித்திபெற்றிருத்தல் வேண்டும். | சான்றிதழினைப் பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br>3. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட தொழில்நுட்பவியல் சான்றிதழ்களை வெளியிடுகின்ற நிறுவனங்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் மேற்படி தொழிநுட்பவியல் தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானவையென மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற வேறு இத்துறைசார் தொழில்நுட்பவியல் தகைமைகள். |
| 06 | தொழிநுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்) பயிற்சித் தரம் **(பயிற்சிக் காலம் 02 வருடங்கள்)** | க.பொ.த (சா/த) பரீட்சையில் **ஒரே அமர்வில்** மொழி(தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்), கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக **நான்கு (04)** பாடங்களில் திறமைச் சித்திகளுடன் **ஆறு (06)** பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அத்துடன்**<br>க.பொ.த (உ/த) பரீட்சையில் கணிதப்பாடத்துறையில் தூய கணிதம் / பிரயோக கணிதம் / இணைந்த கணிதம் அத்துடன் பௌதீகவியல் ஆகிய பாடங்கள் உட்பட **மூன்று (03)** பிரதான பாடங்களில் **ஒரே அமர்வில்** சித்திபெற்றிருத்தல் வேண்டும். | பொருத்தமற்றது |

**குறிப்பு :-**

01. திறந்த போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் பயிற்சித் தரத்திற்கு (குடிசார் மற்றும் மின்னியல்) ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள், ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பயிற்சிக் காலத்தினை திருப்திகரமாக நிறைவு செய்து பரீட்சையில் சித்திபெற்றதனை நிரூபிக்கும் தொடர்புடைய நிறுவனத்தினால் வழங்கப்படும் பெறுபேற்றினை சமர்ப்பித்ததும் **தரம் III** இற்கு ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளப்படுவர்.

02. பயிற்சியின் நிறைவில் நடைபெறும் பரீட்சையில் சித்தியடையத் தவறும் பயிலுனர்களுக்கு, அவர்களுடைய பயிற்சிக்காலத்தினை மேலும் **ஆறு (06)** மாதங்களுக்கு மேற்படாமல் நீடிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். நீடிக்கப்பட்ட பயிற்சிக் காலத்தின் இறுதியில் மீண்டும் நடைபெறும் பரீட்சையில் சித்திபெறாத திறந்த போட்டிப் பரீட்சையின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பயிலுனர்களின் சேவையானது முடிவுறுத்தப்படும்.